**இடம்**: பேருந்து **கருப்பொருள்**: சோர்வு

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, **<u>100 சொற்களுக்குக் குறையாமல்</u>** ஒரு கட்டுரை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் மாதிரிக் கட்டுரையையும் நீ இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக பயன்படுத்திக்கொள்ளலாம்.




| | |
|---|---|
| பள்ளி முடிந்து | பேருந்து நிறுத்துமிடம் |
| உடல் களைப்பு | அயர்ந்து தூங்கினாள் |
| தேம்பி தேம்பி அழுதாள் | ஆறுதல் கூறி |
| வாடகை வண்டி | மறக்கமுடியாத உதவி |

Copyrights reserved. Not for circulation.

*<u>மாதிரிக் கட்டுரை:</u>*

## *<u>சோர்வு</u>*

கமலா கூடைப்பந்து விளையாடுவதில் **வல்லவள்**. அவள் படிக்கும் பள்ளி சிங்கப்பூர் அளவிலான கூடைப்பந்துப் போட்டியில் இறுதி சுற்றுக்குத் தகுதி பெற்றது.

"வெற்றிக்கு முயற்சியும் பயிற்சியும் இரண்டு கண்கள்"

ஆயிற்றே! அதனால் உடற்பயிற்சி ஆசிரியர் **நாள்தோறும்** பள்ளிக் குழுவை கடுமையான பயிற்சிக்கு உட்படுத்தினார். அன்று பயிற்சி முடிந்து கமலா வீடு திரும்ப பேருந்து நிறுத்துமிடத்திற்கு வந்தாள். மாலை மங்கி இலேசான இருள் **கௌவ** தொடங்கியது. கமலாவுக்கு யாரோ அடித்து போட்டது போல உடல் **அசதியாக** இருந்தது. தலைவலி பாடாய்ப்படுத்தியது.

"தலைவலியும் பல்வலியும் தனக்கு வந்தால்தான் தெரியும்"

என்ற பழமொழி எத்தனை உண்மை என்று நினைத்துக்கொண்டாள். அவள் ஏறவேண்டிய பேருந்து வந்தவுடன் மெதுவாக ஏறி இருக்கையில் அமர்ந்துகொண்டாள்.

பேருந்தில் நிலவிய **சாந்தமும்** குளிர் சாதனப் பெட்டியிலிருந்து வீசிய குளிர்ந்த காற்றும் அவளுக்குத் தாலாட்டுப் பாடுவது போல் இருந்தன. தூக்கம் மெதுவாக அவள் கண்களைத் தழுவிக்கொண்டது. சற்றுநேரம் கழித்துக் கமலாவுக்கு விழிப்பு வந்தது. கண்ணாடிச் சன்னல் வழியாக வெளியே பார்த்தவளுக்கு உலகமே இருண்டுவிட்டது போல் இருந்தது. அவள் இறங்கிய வேண்டிய நிறுத்தத்தை தவறவிட்டிருந்தாள். கையில் காசு இல்லாதது நினைவுக்கு வந்தது. கமலாவின் மனத்துக்குள் பயமும் பதற்றமும் குடிகொண்டன. .

அவள் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது. அப்போது பின்பக்கத்திலிருந்து யாரோ அவள் தோளைத் தொடுவது போல இருக்க உடனே

Copyrights reserved. Not for circulation.

திரும்பிப் பார்த்தாள். பின் இருக்கையில் அமர்ந்திருந்த ஆடவர் அவளிடம் “ஏன் அழுகிறாய்? என்ன நடந்தது?” என்று வினவ அவள் நடந்ததை அழுதுகொண்டே கூறினாள். அதை **கூர்ந்து** கேட்ட அந்த ஆடவர் “கவலைப்படாதே! நான் உனக்கு உதவி செய்கிறேன்” என்று ஆறுதல் கூறித் தேற்றினார்.

அடுத்த பேருந்து நிறுத்தத்தில் அந்த ஆடவர் கமலாவை அழைத்துக்கொண்டு பேருந்திலிருந்து இறங்கினார். பிறகு அந்த வழியாகச் சென்ற வாடகை உந்து வண்டியை கைகாட்டி நிறுத்தினார். தன் பணப்பையிலிருந்து ஐம்பது வெள்ளி பணத்தை எடுத்து கமலாவிடம் **அளித்தார்**. வண்டி ஓட்டுனரிடம் கமலாவின் வீட்டு **விலாசத்தைக்** கூறி பத்திரமாகச் சேர்க்குமாறு பணிவன்போடு கேட்டுக்கொண்டார். கமலா மனம் **நெகிழ்ந்து** போனாள். நா தழுதழுக்க அவருக்குத் தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டாள்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது

அந்த ஆடவருக்கு நான் எந்த உதவியும் செய்ததில்லை. அப்படியிருக்க அவர் எனக்கு செய்துள்ள உதவிக்கு இந்த உலகமும் வானமும் ஈடு ஆகாது என்று கமலா மனதுக்குள் நினைத்துக்கொண்டாள்

<u>அருஞ்சொற்கள்</u>

| | |
|---|---|
| **வல்லவள்** | - மிகுந்த திறமை உடையவள் |
| **நாள்தோறும்** | - தினமும் |
| **கௌவ** | - சூழ |
| **அசதியாக** | - சோர்வாக |
| **சாந்தமும்** | - அமைதியும் |
| **கூர்ந்து** | - உற்று |
| **அளித்தார்** | - கொடுத்தார் |
| **விலாசத்தைக்** | - முகவரியைக் |

Copyrights reserved. Not for circulation.

**நெகிழ்ந்து** - இளகி

***<u>பயிற்சி வினா</u>***

பின்வரும் தலைப்பைக் கொண்டு **<u>100 சொற்களுக்குக் குறையாமல்</u>** ஒரு கட்டுரை எழுது. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் உதவிக் குறிப்புகளையும் மனவரைபடத்தையும் இந்தக் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக நீ பயன்படுத்திக் கொள்ளலாம்.

**<u>தூக்கத்தால் நான் இழந்தது</u>**

- எதனால் நீ தூங்கினாய்
- உன் தூக்கத்தால் எதை இழந்தாய்
- அந்த இழப்பால் உனக்கு ஏற்பட்ட பாதிப்பு என்ன
- அந்த பாதிப்பை எவ்வாறு நீ சரி செய்தாய்

*<u>உதவிக் குறிப்புகள்</u>*

- ஆழ்ந்த நித்திரை
- கோழி தூக்கம்
- கண் அயர்ந்தேன்
- கும்பகர்ணனைப் போல தூங்கினேன்
- பள்ளி இறுதி தேர்வுக்குத் தாமதமாகச் சென்றேன்
- கல்வி கேள்விக்குறியானது
- இளமையில் சோம்பல் முதுமையில் வறுமை
- தூங்காதே தம்பி தூங்காதே! நீ சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!
- நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்

Copyrights reserved. Not for circulation.

கெடுநீரார் காமக் கலன்

*மனவரைபடம்*

**முன்னுரை**

**எதனால் தூங்கினாய்?**

**முன்னுரை**

**எப்போது?**

**முன்னுரை**

**எங்கே?**

**தூக்கத்தால் நான் இழந்தது**

**பொருளுரை**

**இழப்பால் ஏற்பட்ட பாதிப்பு என்ன?**

**பொருளுரை**

**எதை இழந்தாய்?**

**பொருளுரை**

**எவ்வாறு சரி செய்தாய்?**

**முடிவுரை**

**கற்றுக்கொண்ட பாடம் / நீதி /**

Copyrights reserved. N

Copyrights reserved. Not for circulation.

Copyrights reserved. Not for circulation.

Copyrights reserved. Not for circulation.